"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 27.07.2022.

## நகர்மன்ற அவசரக் கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம், ஆடி மாதம் 11 - ம் நாள் 27.07.2022-ம் தேதி புதன் கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01:-**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( கு.வ.2 ) துறை அரசாணை எண்.12, நாள் : 28.01.2013-ல் ரூ.68.83 கோடி மதிப்பீட்டில் தேனி - அல்லிநகரம் நகராட்சியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்திட கீழ்கண்ட நிதிப்பகிர்வில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| TNUDP - III மற்றும் TNUDF கடன் | ரூ. 41.30 கோடி |
| TNUDP - III மான்யம் | ரூ. 20.65 கோடி |
| நகராட்சி பங்களிப்பு | ரூ. 6.88 கோடி |

மேற்படி நிதிப்பகிர்வில் குறிப்பிட்டுள்ள கடன் தொகை ரூ. 41.30 கோடியினை Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited நிறுவனத்தில் இருந்து பெறுவதற்கு கடன் ஒப்பந்தத்தில் நான்காவது முறையாக திருத்தம் செய்து 30.09.2020 ம் தேதி வரைக்கும் கால நீட்டிப்பு செய்யப்பட்டு இருந்தது.

இந்நிலையில் இத்திட்டத்திற்காக Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited நிறுவனத்திடம் மீதம் பெறப்பட வேண்டிய கடன் தொகையினை பெறுவதற்கான காலம் 30.09.2020-ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், காலநீட்டிப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு TNUDF நிறுவனத்தின் 01.07.2022-ம் தேதி கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆய்வுக்கூட்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மேற்காணும் திட்டப்பணிக்கு தற்போது 31.03.2023-ம் தேதி வரைக்கும் கடன் மற்றும் மானியத் தொகை பெறுவதற்கான காலத்தினை நீட்டிப்பு செய்ய கோரி Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited நிறுவனத்தில் ஐந்தாவது முறையாக கடன் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 4484 / 2013 / இ1**
**தீர்மான எண் :** 109
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 02:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட தேனி - சமதர்மபுரம் ஸ்ரீ.முத்துமாரியம்மன் கோவில் வளாகத்தில் நகரரட்சிக்கு சொந்தமான சமதர்மபுரம் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி உள்ளது. மேற்கண்ட தண்ணீர்த்தொட்டி பழுதடைந்து உள்ளது எனவும், இதனால் பொது மக்களுக்கு உயிர் சேதம் ஏதும் ஏற்படா வண்ணம், மேற்கண்ட பழுதடைந்த மேல்நிலைத்தொட்டியை இடித்து அப்புறப்படுத்தக்கோரி அப்பகுதி பொதுமக்கள் பல்வேறு கோரிக்கை மனுக்களில் கோரியுள்ளனர். அதன்படி, மேற்கண்ட தண்ணீர் தொட்டியை நேரில் ஆய்வு செய்யப்பட்டது.

மேற்கண்ட நீர்தேக்கத்தொட்டி அமைந்துள்ள இடம் வார்டு எண்.19, சமதர்மபுரம் வனத்துறைக்கு சொந்தமான (வால்கரடு ) எனும் பகுதியாக உள்ளது. மேற்கண்ட நீர் தேக்கத்தொட்டி கட்டி சுமார் 40 ஆண்டுகள் ஆகும்.

இருப்பினும், அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கையினை ஏற்று மேற்கண்ட மேல்நிலைத்தொட்டியின் உறுதித்தண்மையை ஆய்வு செய்து அதற்கான உறுதித்தன்மை சான்று வழங்கக்கோரி இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம். நாள். 10.12.2021 தேதிய கடிதத்தின் வாயிலாக கோரப்பட்டது. அதன்படி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டிட ( க&ப ) கோட்டம். தேனி அவர்களின் கடித. ந.க. எண். 309m. வப/கோ.80/2021. நாள். 20.12.2021 ன்படி, மேல்நிலைத்தொட்டியினை ஆய்வு செய்யப்பட்டதில், மேற்கண்ட நீர்தேக்கத்தொட்டி உறுதித்தன்மையுடன் இல்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். மேலும் மேற்கண்ட நீர்தேக்கத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தீர்மானம் நிறைவேற்றிடக்கோரி 17 நகர்மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து கையொப்பமிட்டு விண்ணப்பித்துள்ளனர். எனவே, மேற்கண்ட நீர்தேக்கத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்தவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.1.35 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 1813 / 2021 / இ2**

**தீர்மான எண்** **:** 110
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03:-

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய செகண்டரி பிளாக் கடை எண்: 26 (குத்தகை உரிமம் எண்: **125/2017018**) குத்தகைதாரர் திரு.I.V.சரவணபிரேம் என்பவர் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக விண்ணப்பித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட குத்தகை இனத்தினை 30-09-2022 உடன் நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், அதற்குண்டான குத்தகை தொகையினை குத்தகைதாரரது பெயரில் உள்ள வைப்புத் தொகையில் ஈடுசெய்திடவும், மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு புதிதாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1084 / 2021 / அ3**

**தீர்மான எண்** **:** 111
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04:-

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய செகண்டரி பிளாக் கடை எண்: 27 (குத்தகை உரிமம் எண்: **125/2017015**) குத்தகைதாரர் திருமதி. S.நிரஞ்சனா என்பவர் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக விண்ணப்பித்துள்ளார்

எனவே, மேற்கண்ட குத்தகை இனத்தினை 30-09-2022 உடன் நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், அதற்குண்டான குத்தகை தொகையினை குத்தகைதாரரது பெயரில் உள்ள வைப்புத் தொகையில் ஈடுசெய்திடவும், மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு புதிதாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1084 / 2021 / அ3**

**தீர்மான எண்** **:** 112
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 05:-

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 17 , பெரியகுளம் சாலையில், தேனி காவல் நிலையம் எதிரில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிட கட்டிடத்தினை பராமரிக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 0.85 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்** : 3744 / 2018 / **இ1**

**தீர்மான எண்** : 113
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 06:-

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 09, பெரியகுளம் சாலையில், அல்லிநகரத்தில் அமைந்துள்ள சமுதாயக் கழிப்பிட கட்டிடத்தினை பராமரிக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்** : 3744 / 2018 / **இ1**
**தீர்மான எண்** : 114
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 07:-

**பொது நிதி 2022 - 2023 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் T.N. 60 .D 3884 க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 24.06.2022 ம் தேதி அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | லட்சுமி ஆட்டோ கேரேஜ், கம்பம் | 38,000.00 | அதிகம் |
| 2. | ஸ்ரீ.முருகன் ஆட்டோ, எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம், | 34,100.00 | குறைவு |
| 3. | ஸ்ரீ. சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், கம்பம். | 36,700.00 | அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:</u>** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ.முருகன் ஆட்டோ, எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம்,, நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1261 / 2022 / இ2**

**தீர்மான எண் :** 115

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி